தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

மற்றம்

விலை ரூ.15 மலர் 23 | இதழ் 1 மே 2021

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

மகளிர் சுய உதவி குழுக்களுக்கான மாத இதழ்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சராக திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் பதவியேற்பு!

வாழ்வு மற்றும் வாழ்வாதார சிறப்பிதழ்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்களை தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. கேஆர். பெரிய கருப்பன் அவர்கள் சந்தித்து, தமிழ்நாடு ஊராட்சி செயலாளர்கள் சங்கம் சார்பில் கொரோனா நிவாரப் பணிகளுக்காக மாண்புமிகு முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 10 லட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்.

உள்ளடக்கம்...

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதவியேற்பு	05
கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்து ஆய்வு	11
சுய உதவிக் குழுக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்	13
வங்கியாளர்களுடன் கலந்தாய்வுக் கூட்டம்	14
கொரோனா வைரஸ் தொற்று பரவல் தடுப்பு நடவடிக்கைகள் ஆய்வு	16
தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்	24
தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்	30
முற்றக் கச்சேரி	26
'மனம் இனிது'மனநலத் திட்டம்	33

குறளும்-பொருளும்

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

எந்தவொரு பொருள் குறித்து எவர் எதைச் சொன்னாலும், அதை அப்படியே நம்பி ஏற்றுக் கொள்ளாமல் உண்மை எது என்பதை ஆராய்ந்து தெளிவதுதான் அறிவுடைமையாகும்.

இன்பாக்ஸ்

கவிதை, உடல் நல குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவி குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவி குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவி குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால், அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

மின்னஞ்சல் | wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியான முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்திட அனைத்து மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் முற்றம் இதழுக்கு சந்தா சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு, சந்தாக்களை சேர்த்த அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் முற்றம் இதழ் நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

தொடர்ந்து இவ்வாண்டும் முற்றம் இதழிற்கு சந்தா சேர்க்க நிர்ணயிக்கப்பட்டிருக்கும் இலக்கை நிறைவு செய்திட அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளும் நடவடிக்கை மேற்கொள்ள முற்றம் இதழின் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்து வரும் அனைத்து மாவட்டங்களின் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர்கள், அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் மகளிர் திட்ட செயலாக்க அலகுகள், உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சுய உதவி குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் உட்பட அனைவருக்கும் முற்றம் இதழ் சார்பாக நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

முற்றம் மாத இதழ்
ஆசிரியர்,

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம்

மலர் 23
இதழ் 1
மே 2021
விலை ரூ.15

ஆசிரியரிடமிருந்து...

கௌரவ ஆசிரியர்கள்	**திருமதி பா. ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப.,** மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், முதன்மை செயல் அலுவலர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
	முனைவர் ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., செயல் இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தலைமை செயல் அலுவலர் (பொ), தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்
பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்	**எஸ். சின்னப்பன்,** செயலர், முற்றம்
ஆசிரியர் குழு	**சுஜாதா ஜேக்கப்,** கூடுதல் இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
	ஜே. கணேஷ் கண்ணா, கூடுதல் இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
	எஸ். சாமுவேல் இன்பதுரை, கூடுதல் இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
நிர்வாக ஆசிரியர்	**ரா. ஜீவா,** பொது மேலாளர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
நிதி நிர்வாகம்	**சு. இராமலெட்சுமி,** நிதி ஆலோசகர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
பொறுப்பாசிரியர் மற்றும் மேலாளர்	**எஸ். விஜயலட்சுமி,** செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
துணை ஆசிரியர்	**ஏ. கண்ணன்**
முதுநிலை கணக்காளர்	**சு. சசிகலா**
பிழை திருத்துபவர்	**எஸ். எஸ். ரவிச்சந்திரன்**
கணினி வடிவமைப்பு	ஆ. சுரேஷ் பாபு

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
ஆசிரியர், 'முற்றம்', தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம்,
சென்னை – 600 034.
தொலைபேசி : 044 4211 9497, 044 2817 3412 / 3413
தொலைநகல் : 044 2817 3409

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

தொடங்கட்டும் விடியல்...

அன்புள்ள வாசகர்களுக்கு

தமிழ்நாட்டில் நடைபெற்று முடிந்த 16வது சட்டமன்ற தேர்தலில் மாபெரும் வெற்றி பெற்று, தமிழ்நாட்டு முதலமைச்சராக பதவியேற்று அரியணை ஏறிய உடனேயே தமிழக மக்களின் நலனை கருத்தில் கொண்டு, ஐந்து திட்டங்களை முதல் கையெழுத்திலேயே நிறைவேற்றியுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்களுக்கு முற்றம் தனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கின்றது.

தமிழர்களின் வாழ்வில் விழிப்புணர்வு ஒளியை ஏற்றிய பல்வேறு தலைவர்களால் போராடி வென்றெடுத்த சமத்துவ கொள்கைகளை உருவாக்கிய தலைவர்களின் வரிசையில் அவர்களின் பணியை தொடர்ந்து எடுத்து செல்ல நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுப்பார் என தமிழகமே எதிர்பார்க்கின்றது.

பெண்களின் உரிமையை காக்கவும், அவர்களின் பொருளாதார வளர்ச்சி மேம்படவும், ஆரம்பிக்கப்பட்ட மகளிர் திட்டம் உத்வேகத்துடன் புதிய வடிவம் பெறும் என ஆவலுடன் அனைவரும் எதிர்பார்க்கின்றனர். தமிழகத்தில் செயல்பட்டு வரும் இலட்சக்கணக்கான மகளிர் சுய உதவி குழுக்கள் அனைவரும் இந்த புதிய அரசை நம்பிக்கையோடும் எதிர்பார்ப்போடும் நோக்கி இருக்கின்றனர்.

கொரோனா வைரஸ் பெருந்தொற்றானது மக்கள் மத்தியில் மரண பீதியை ஏற்படுத்தி உள்ளது. இத்தருணத்தில் பதவிக்கு வந்தவுடனேயே அரிசி பெறும் ஒவ்வொரு அட்டைதாரர்களுக்கும் ரூ. 4,000/- நிதி உதவி அளித்திருப்பது சாமான்ய மக்கள் அனைவருக்கும் நம்பிக்கையை கொடுத்திருக்கின்றது. உடனடியாக சுகாதாரத் துறையோடு கலந்தாலோசித்து, நிர்வாகத்தை முடுக்கி விட்டு, களப்பணியில் அரசு நேரடியாக இறங்கியிருப்பதை அனைவரும் பாராட்டுகின்றனர். முழு ஊரடங்கு அறிவித்துள்ள இச்சூழலில் அனைவரும் அரசிற்கு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கொரோனா வைரஸ் தொற்று பரவலுக்கு எதிராக கடந்த காலங்களில் ஆக்கப்பூர்வமான தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு பல்வேறு தரப்பினரின் பாராட்டுக்களையும் பெற்ற சுய உதவிக் குழுவினர் மீண்டும் கொரோனாவுக்கு எதிரான போராட்டத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளும் நேரமிது. எனவே சுய உதவிக் குழு மகளிர் மீண்டும் ஒரு களப் போராட்டத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

இப்படிக்கு,

(எஸ்.சின்னப்பன்)
ஆசிரியர், முற்றம்

மாண்புமிகு மு. க. ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சராக பதவியேற்றார்கள்

தமிழ்நாட்டில் சமீபத்தில் நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் மகத்தான வெற்றி பெற்ற திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் 07.05.2021 அன்று தமிழ்நாடு முதலமைச்சராகப் பதவி ஏற்றுக் கொண்டார். அத்துடன் 2 பெண்கள் உட்பட 33 அமைச்சர்களும் பதவி ஏற்றுக் கொண்டனர்.

சென்னை ஆளுநர் மாளிகையில் எளிமையாக நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு பன்வாரிலால் புரோகித் அவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சராகப் பதவிப் பிரமாணமும், ரகசியக் காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் தமிழக மக்களின் வாழ்வின் புது ஒளியை ஏற்படுத்தும் வகையில் பிறப்பித்த 5 முக்கிய அரசாணைகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சராக திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் பதவியேற்றவுடன், 07.05.2021 அன்று தலைமைச் செயலகத்திற்கு வருகை புரிந்தார். அவரை தமிழக அரசின் தலைமைச் செயலாளர் மற்றும் உயர் அதிகாரிகள் வரவேற்றனர். முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களின் வாழ்வில் புது ஒளியை ஏற்படுத்தும் வகையில் கீழ்கண்ட 5 முக்கிய அரசாணைகளைப் பிறப்பித்தார்கள்.

1. *கொரோனா அச்சுறுத்தல் தற்போது உயர்ந்து வரும் நிலையில், மக்களின் இன்னல்கள் தொடர்வதால் தமிழக மக்களின் துன்பங்களைப் போக்குவதற்கும், வாழ்வாதாரத்திற்கு உதவும் வகையிலும், அரிசி குடும்ப அட்டை வைத்துள்ள குடும்பங்கள் அனைத்திற்கும் ஆறுதல் அளிக்கும் வகையில் 4,000 ரூபாய் வழங்கப்படும் என்று அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் பொருட்டு, சுமார் 2,07,67,000 குடும்ப அட்டைதாரர்களுக்கு 4,153.39 கோடி ரூபாய் செலவில் 2,000 ரூபாய் வீதம் நிவாரண தொகை முதல் தவணையாக மே மாதத்திலேயே வழங்கும் ஆணையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கையொப்பமிட்டுள்ளார்கள்*
2. *தேர்தல் அறிக்கையில் அளித்திருக்கும் வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் மக்களின் நலன் கருதி, ஆவின் பால் விலையை லிட்டர் ஒன்றுக்கு மூன்று ரூபாய் வீதம் 16.5.2021 முதல் குறைத்து விற்பனை செய்ய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசாணை பிறப்பித்துள்ளார்கள்.*
3. *தேர்தல் வாக்குறுதியில் இடம்பெற்றிருக்கும் அறிவிப்பினைச் செயலாக்கும் வகையில், தொடர்ந்து தமிழகம் முழுவதும் உள்ள அரசுப் போக்குவரத்துக் கழகக் கட்டுப்பாட்டில் இயங்கும் சாதாரண கட்டண நகரப் பேருந்துகளில் பயணம் செய்யும் பணிபுரியும் மகளிர், உயர்கல்வி பயிலும் மாணவியர் உள்ளிட்ட அனைத்து மகளிரும் கட்டணமில்லாமலும், பேருந்துப் பயண அட்டை இல்லாமலும் 08.05.2021 முதல் பயணம் செய்ய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள்.*
4. *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேர்தல் பரப்புரையின்போது மாவட்டந்தோறும் மக்களின் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பான மனுக்களைப் பெற்று, அம்மனுக்களின் மீது ஆட்சிக்கு வந்த 100 நாட்களுக்குள் நடவடிக்கை எடுக்கப்பட்டு தீர்வு காணப்படும் என்கிற வாக்குறுதியை அளித்துள்ளார்கள். அந்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில்,* **"உங்கள் தொகுதியில் முதலமைச்சர்"** *என்ற திட்டத்தை செயல்படுத்த ஒரு புதிய துறையை உருவாக்கி அதற்கு இந்திய ஆட்சிப் பணி நிலை அலுவலர் ஒருவரை நியமிக்கும் அரசாணைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள்.*
5. *கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள பொதுமக்கள் பலரும் அரசு மருத்துவமனைகள் மட்டுமின்றி தனியார் மருத்துவமனைகளிலும் சிகிச்சை பெற்று வரும் நிலையில், பொதுமக்களின் நலன் கருதி அவர்களின் இன்னலைக் குறைக்கும் வகையில் சிகிச்சைக்கான மருத்துவமனை கட்டணத்தை தமிழக அரசே காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் ஏற்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார். இதன்படி மாண்புமிகு முதலமைச்சரின் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், அனைத்து வகையான கொரோனா நோய் சிகிச்சை செலவுகளையும் தனியார் மருத்துவமனைகளுக்கு அரசு மீள வழங்கும்.*

கொரோனா தொற்று பரவல் தடுப்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளின் தற்போதைய நிலை குறித்து அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக் காட்சி மூலமாக ஆய்வு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 07.05.2021 அன்று தலைமைச் செயலகத்தில், கொரோனா தொற்று பரவல் தடுப்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளின் நிலை குறித்து அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக் காட்சி மூலமாக ஆய்வு மேற்கொண்டார்கள். இந்தக் கூட்டத்தில், மாண்புமிகு நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. கே. என். நேரு, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். ராமச்சந்திரன், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., காவல்துறை தலைமை இயக்குநர் திரு. ஜே. கே. திரிபாதி, இ.கா.ப., மருத்துவ நிபுணர் குழுவினர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் 07.05.2021 அன்று நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியால் அமைக்கப்பட்டு வரும் ஆக்சிஜன் வசதியுடன் கூடிய 800 படுக்கைகள் கொண்ட கொரோனா சிறப்பு மையத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தார். மாண்புமிகு நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. கே. என். நேரு, மாண்புமிகு ஊரக தொழிற்துறை அமைச்சர் திரு. தா. மோ. அன்பரசன், வணிகவரித் துறை ஆணையர் / முதன்மை செயலாளர் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் கோவிட் 19 கண்காணிப்பு அலுவலர் திரு. எம். ஏ. சித்திக், இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் திரு. கோ. பிரகாஷ், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் தலைமையில் 18.05.2021 அன்று காணொலி காட்சி மூலமாக மாநில முதலமைச்சர்களுடன் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மை செயலாளர், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர், பொதுத்துறை செயலாளர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 19.05.2021 அன்று தலைமைச் செயலகத்தில், கொரோனா நோய்த்தொற்று நிவாரண நடவடிக்கைகள் தொடர்பாக தடன்னார்வ தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. கேஆர். பெரிய கருப்பன், மாண்புமிகு சமூக நலன் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 20.05.2021 அன்று சேலம், உருக்காலை வளாகத்தில் கொரோனா நோயாளிகளின் சிகிச்சைக்காக ஆக்ஸிஜன் வசதியுடன் கூடிய 500 படுக்கை வசதிகள் கொண்ட கோவிட் சிறப்பு சிகிச்சை மையத்தை திறந்து வைத்து, பார்வையிட்டார். இந்த நிகழ்வின் போது, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. வி. செந்தில் பாலாஜி, நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எஸ். கார்மேகம், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் 20.05.2021 அன்று திருப்பூர் மாவட்டம், நேதாஜி ஜவுளிப் பூங்காவில், 18 முதல் 44 வயது வரை உள்ளவர்களுக்கான கொரோனா தடுப்பூசி முகாமை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வின்போது, மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் திரு. சு. முத்துசாமி, மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. மு. பெ. சாமிநாதன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. வி. செந்தில் பாலாஜி, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சு. விஜயகார்த்திகேயன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் 20.05.2021 அன்று சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடியில் உள்ள மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு நேரில் சென்று திடீர் ஆய்வு மேற்கொண்டு, பொதுமக்களுக்கு கொரோனா தடுப்பூசி அளிப்பதை பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. வி. செந்தில் பாலாஜி, சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எஸ். கார்மேகம், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்
திரு. கே.ஆர். பெரிய கருப்பன் அவர்கள்
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர்கள்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர்கள்,
மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்களுடன்,
உள்ளாட்சி அமைப்புகள் மேற்கொள்ள வேண்டிய கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்து
காணொளி வாயிலாக ஆய்வு செய்தார்கள்.

மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள், உள்ளாட்சி அமைப்புகள் மேற்கொள்ள வேண்டிய கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர்கள், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர்கள், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்களுடன் 13.05.2021 அன்று காணொளி காட்சி வாயிலாக ஆய்வு மேற்கொண்டார்கள்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆய்வில் குறிப்பிடும் போது, நோய் தாக்குதலுக்கு ஆளாகியுள்ள மக்களையும், நோய் வராமல் தடுக்கும் முயற்சிகளையும் ஊரக வளர்ச்சித் துறையானது பிற அரசு துறைகளான மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன் துறை, காவல் துறை, வருவாய்த் துறை ஆகியவற்றுடன் இணைந்து செயல்பட வேண்டும் எனவும், இச்செய்தியை இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அலுவலர்கள் இத்துறையிலுள்ள 1.5 இலட்சம் முன்களப் பணியாளர்களுக்கும் கொண்டு சேர்த்திட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மேலும் கொரோனா வைரஸ் பரவலின் முதல் அலை அதிகமாக நகரப் பகுதிகளை பாதித்தது. தற்போது இரண்டாவது அலையானது ஊரகப் பகுதிகளில் அதிக அளவு பாதிப்பினை ஏற்படுத்துகிறது. எனவே ஊரகப் பகுதிகளில் பொது சுகாதாரத்தினை மேம்படுத்திடும் வகையில் குப்பைகளை அகற்றி தூய்மையாகப் பராமரிக்க வேண்டும். மக்கள் கூடுகின்ற இடங்களில் குறிப்பாக சுக துக்க காரிய இடங்களில் அனுமதிக்கப்பட்ட அளவே பொதுமக்கள் கலந்து கொள்வதை உறுதி செய்ய வேண்டும். இந்நோய் தடுப்பு நடவடிக்கைகளை ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மேற்கொள்ள வேண்டும் எனவும். உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள மக்கள் பிரதிநிதிகளையும், இக்கொரோனா தொற்று பரவுதலைக் கட்டுப்படுத்தும் பணிகளில் இணைத்துக் கொண்டு சிறப்பாக செயல்பட வேண்டும் எனவும் கூறினார்.

தொடர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளில் பொதுமக்கள் நடமாட்டத்தை முற்றிலும் கட்டுப்படுத்தி, நோய்

பரவுதலை தடுத்திட வேண்டும் எனவும், அனைத்து தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தேவையான அளவு முகக் கவசங்கள், கைகழுவும் திரவம், கிருமி நாசினி போன்றவற்றை உற்பத்தி செய்து உள்ளாட்சி அமைப்பிலுள்ள முன்களப் பணியாளர்களுக்கு வழங்குவதுடன், பொதுமக்களிடையே சமூக இடைவெளியை கடைபிடித்தல், முகக் கவசம் அணிதல், அடிக்கடி கை கழுவுதல் போன்ற பழக்கங்களை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்திட வேண்டும் எனவும், முழுவதுமாக கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் சமுதாய சமையலறைகளை ஏற்படுத்தி, அவற்றின் மூலம் கொரோனா நோய் பாதித்தவர்களுக்கு தடையின்றி உணவு கிடைத்திட ஏற்பாடு செய்திடல் போன்றவற்றை மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மகளிர் திட்டத்தின் கீழ் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் பயன்பாட்டிற்கு 'மின்மதி' எனும் செயலி ஏற்கனவே உருவாக்கப்பட்டு, அச்செயலியை 26 இலட்சத்திற்கும் மேற்பட்ட சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பதிவிறக்கம் செய்து பயன்படுத்தி வருகிறார்கள். தற்போது இன்னும் விரைவாக செய்திகளையும், நிகழ்வுகளையும் அறிந்து கொள்ள 'மதி குரல்' எனும் ட்விட்டர் சமூக வலை தளக் கணக்கு ஒன்று மாண்புமிகு அமைச்சர் அவர்களால் 13.05.2021 அன்று துவக்கப்பட்டு செயல்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டது. இந்த வலைதளத்தை அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. பா.ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப. அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் ஆணையர் டாக்டர். கே. எஸ். பழனிசாமி, இ.ஆ.ப. அவர்கள் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை மற்றும் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கூடுதல் இயக்குநர்கள், துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கொரோனா வைரஸ் தொற்று பரவலைத் தடுக்க மாவட்டந்தோறும் சிறப்பு ஆலோசனைக் கூட்டம் மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, கொரோனா வைரஸ் தொற்று பரவலைத் தடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள மாவட்டந்தோறும் ஊரக வளர்ச்சித் துறை மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் அலுவலர்களுடன் மாண்புமிகு ஊராட்சித் துறை அமைச்சர் அவர்கள் கலந்தாய்வுக் கூட்டங்கள் நடத்தி, கொரோனா வைரஸ் பரவலைத் தடுக்க ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளை வழங்கி வருகிறார்.

அதன் ஒருபகுதியாக, சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாண்புமிகு தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரிய கருப்பன் அவர்கள் தலைமையில் கொரோனா வைரஸ் தொற்று பரவலை கட்டுப்படுத்துவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் 15.05.2021 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. பா. ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் ஆணையர் டாக்டர். கே. எஸ். பழனிசாமி, இ.ஆ.ப., சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பி. மதுசூதன் ரெட்டி, இ.ஆ.ப., வருவாய் துறை அலுவலர், காவல் துறை கண்காணிப்பாளர், சட்டமன்ற உறுப்பினர்கள், சிவகங்கை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கூடுதல் இயக்குநர்கள், மாவட்ட திட்ட இயக்குநர்கள் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின்போது, ரூர்பன் திட்டத்தின் கீழ் சிவகங்கை மாவட்டம், வாணியங்குடி தொகுப்பில் அடங்கியுள்ள 5 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ரூ. 49.70 இலட்சம் மதிப்பிலான நடமாடும் உணவகம் மற்றும் விற்பனை வாகனங்களையும், சிவகங்கை ஒன்றியத்தை சார்ந்த 10 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு அமுதசுரபி நிதியிலிருந்து தொழில் கடனாக ரூ. 5 இலட்சமும் மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

சுய உதவிக் குழுக்களின் பொருளாதார முன்னேற்றம் குறித்து வங்கியாளர்களுடன் கலந்தாய்வுக் கூட்டம்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் பயன் பெறும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் பொருளாதார முன்னேற்றம் குறித்து மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள் தலைமையில் 11.05.2021 அன்று, வங்கியாளர்களுடன் கலந்தாய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது.

இக்கூட்டத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. பா. ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் இயக்குநர்கள் திரு. ஜா. சம்பத், திரு. ஜே. கணேஷ் கண்ணா, திரு. எஸ். சாமுவேல் இன்பதுரை, நபார்டு வங்கி முதன்மை பொது மேலாளர் திரு. செல்வராஜ், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் மாநில அளவிலான வங்கிக் கூட்டமைப்புத் தலைவர் திரு. மொகந்தா, தமிழ்நாடு கிராம வங்கி தலைவர் திரு. செல்வராஜ், பாரத வங்கியின் பொது மேலாளர் திரு. வினோத் ஜோஷ்வா, கனரா வங்கியின் பொது மேலாளர் திரு. கண்ணன், இந்தியன் வங்கியின் பொது மேலாளர் திரு. சுப்பிரமணியன், ஐ.சி.ஐ.சி.ஐ, வங்கியின் மண்டல மேலாளர் திரு. ஸ்ரீதர் ரங்கநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில், மகளிர் சுய உதவிக் குழுக்கள் பொருளாதார ரீதியாக மேம்பாடு அடையும் வகையில் சுழல் நிதி மற்றும் கடனுதவிகள் வழங்குவது குறித்து வங்கிகளின் பிரதிநிதிகள் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் விளக்கிக் கூறினார்கள்.

மகளிருக்கான புதிய திட்டங்களை உருவாக்கி, வங்கிகள் மூலம் செயல்படுத்த வங்கிகள் ஒத்துழைக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வங்கிகளின் பிரதிநிதிகளைக் கேட்டுக் கொண்டதுடன், வங்கிகளின் ஆய்வுக் கூட்டங்களை மாவட்டந்தோறும் அடிக்கடி நடத்தி மகளிர் சுய உதவிக் குழு பெண்களின் வாழ்வாதார முன்னேற்றம் குறித்த செயல்பாடுகள் தொடர்ந்து நடைபெறுவதை உறுதி செய்ய வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்கள்.

கொரோனா கால கட்டத்திலும், அதனைத் தொடர்ந்த கால கட்டங்களிலும் மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு பல்வகைக் கடன்களை வழங்கி, அவர்களின் பொருளாதார முன்னேற்றத்தில் பங்கெடுப்போம் என மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் வங்கிகளின் பிரதிநிதிகள் உறுதியளித்தனர்.



பெண்களுக்கு எதிரான வன்கொடுமை ஒழித்தல் குறித்து பல்துறை அலுவலர்களுடன் கலந்தாலோசனைக் கூட்டம்

சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாக கூட்டரங்கில், பெண்களுக்கு எதிரான வன்கொடுமையை ஒழித்தல் தொடர்பான பல்துறை அலுவலர்கள் பங்கேற்ற கலந்தாய்வு கூட்டம், 28.04.2021 அன்று தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. பா. ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கலந்தாய்வு கூட்டத்தில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர் (கூடுகை மற்றும் கூட்டாண்மை) திரு. ஜா. சம்பத், இணை இயக்குநர் (சமூக நலத்துறை), இணை இயக்குநர் (பொது சுகாதாரத்துறை (மருத்துவ பணிகள்), காவல் துறை ஆய்வாளர், மனநல மருத்துவ கல்லூரி பேராசிரியர், இணை இயக்குநர் (நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்) மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கூடுகை மற்றும் கூட்டாண்மை பிரிவு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மேற்படி கூட்டத்தில் பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகளை ஒழிக்க ஊராட்சி அளவில் விழிப்புணர்வு ஏற்படுத்திட பயிற்சி அளிப்பது அத்தியாவசியமாகும் எனவும், அனைத்து துறைகளும் தங்களது பங்களிப்பாக கிராமப்புற அளவில் விழிப்புணர்வு ஏற்படுத்திட களப் பணியாளர்களை பயன்படுத்திடவும் ஆலோசிக்கப்பட்டது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் மாதந்தோறும் வெளிவரும் முற்றம் பத்திரிக்கையில் அந்தந்த துறைகளில் எடுக்கப்படும் நடவடிக்கைகளை வெளியிட ஒத்துழைப்பு தெரிவிக்கப்பட்டது. பெண்கள் அதிகம் பயிலும் கல்லூரிகள் மற்றும் பள்ளிகளில் ஆபத்து நேரங்களில் காவலன் ஆப் (app) பயன்படுத்துவது பற்றியும், குற்றங்களை குறைக்க விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டியது அவசியம் என தெரிவிக்கப்பட்டதுடன், பல்துறை அலுவலர்களும் ஒன்றிணைந்து பெண்களுக்கு எதிரான வன்கொடுமையை தடுத்திட ஒருங்கிணைந்து செயல்பட தீர்மானிக்கப்பட்டது.

கொரோனா தொற்று பரவாமல் தடுக்கும் நடவடிக்கைகள் குறித்து, அரசு அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம்

கன்னியாகுமரி மாவட்ட கண்காணிப்பாளரும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநருமான திருமதி. பா. ஜோதி நிர்மலாசாமி, இ,ஆ.ப., அவர்கள் முன்னிலையில், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்ட அரங்கில், கொரோனா தொற்று பரவாமல் தடுக்கும் நடவடிக்கைகள் குறித்த, அரசு அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் 07.05.2021 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. வெ. பத்ரி நாராயணன், இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி. இரா. ரேவதி, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திருமதி. ஐ. எஸ். மெர்சி ரம்யா, இ.ஆ.ப., பத்மநாபபுரம் சார் ஆட்சியர் திரு. மா. சிவகுரு பிரபாகரன், இ.ஆ.ப., முதல்வர் (ஆசாரி பள்ளம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை) மரு. சுகந்தி ராஜகுமாரி, இணை இயக்குநர் (மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்) மரு. ஏ. பிரகலாதன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு. மா. வீராசாமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கொரோனா வைரஸ் தொற்று பரவல் தடுப்பு நடவடிக்கைகள் ஆய்வு

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அடையாறு மண்டலத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா வைரஸ் தொற்று பரவல் தடுப்பு நடவடிக்கைகளை அடையாறு மண்டல சிறப்பு அலுவலர் / தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் முனைவர் ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அப்பகுதியில் வசிக்கும் மக்களிடம் உடல் நலம் குறித்த விபரங்களை கேட்டறிந்து, கொரோனா வைரஸ் தொற்று பரவலில் இருந்த பாதுகாப்பாக இருக்குமாறு அறிவுறுத்தியதுடன், அங்கு அமைக்கப்பட்டிருந்த சிறப்பு மருத்துவ முகாமினைப் பார்வையிட்டு, கொரோனா பரிசோதனை குறித்த விபரங்களையும் கேட்டறிந்தார்.



பெண்களுக்கு எதிரான வன்கொடுமை ஒழித்தல் குறித்து பல்துறை அலுவலர்களுடன் கலந்தாலோசனைக் கூட்டம்

பெண்களுக்கு எதிரான வன்கொடுமையை ஒழித்தல் தொடர்பான பல்துறை அலுவலர்கள் பங்கேற்ற கலந்தாய்வு கூட்டம், சென்னை காவல்துறை ஆணையர் அலுவலகத்தில் 21.04.2021 அன்று நடைபெற்றது.

இக்கலந்தாய்வு கூட்டத்தில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர் (கூடுகை மற்றும் கூட்டாண்மை) திரு. ஜா. சம்பத், இணை இயக்குநர் (சமூக நலத்துறை), இணை இயக்குநர் (பொது சுகாதாரத்துறை மருத்துவ பணிகள்), காவல் துறை ஆய்வாளர், மனநல மருத்துவ கல்லூரி பேராசிரியர், இணை இயக்குநர் (நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்) மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கூடுகை மற்றும் கூட்டாண்மை பிரிவு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மேற்படி கூட்டத்தில் பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகளை ஒழிக்க ஊராட்சி அளவில் விழிப்புணர்வு ஏற்படுத்திட பயிற்சி அளிப்பது அத்தியாவசியமாகும் எனவும். அனைத்து துறைகளும் தங்களது பங்களிப்பாக கிராமப்புற அளவில் விழிப்புணர்வு ஏற்படுத்திட களப் பணியாளர்களை பயன்படுத்திடவும் ஆலோசிக்கப்பட்டது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் மாதந்தோறும் வெளிவரும் முற்றம் பத்திரிக்கையில் அந்தந்த துறைகளில் எடுக்கப்படும் நடவடிக்கைகளை வெளியிட ஒத்துழைப்பு நல்கிட தெரிவிக்கப்பட்டது. பெண்கள் அதிகம் பயிலும் கல்லூரிகள் மற்றும் பள்ளிகளில் ஆபத்து நேரங்களில் காவலன் ஆப் (App) பயன்படுத்துவது பற்றியும், குற்றங்களை குறைக்க விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டியது அவசியம் என தெரிவிக்கப்பட்டதுடன், பல்துறை அலுவலர்களும் ஒன்றிணைந்து பெண்களுக்கு எதிரான வன்கொடுமையை தடுத்திட ஒருங்கிணைந்து செயல்பட தீர்மானிக்கப்பட்டது.

மாண்புமிகு மு. க. ஸ்டாலின் அவர்கள்
தமிழ்நாடு முதலமைச்சராக பதவியேற்றார்கள்.
33 அமைச்சர் பெருமக்களும் பதவியேற்றுக் கொண்டனர்

தமிழ்நாட்டில் சமீபத்தில் நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் மகத்தான வெற்றி பெற்ற திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் 07.05.2021 அன்று தமிழ்நாடு முதலமைச்சராகப் பதவி ஏற்றுக் கொண்டார். அத்துடன் 2 பெண்கள் உட்பட 33 அமைச்சர்களும் பதவி ஏற்றுக் கொண்டனர்.

சென்னை ஆளுனர் மாளிகையில் எளிமையாக நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழக ஆளுநர் திரு பன்வாரிலால் புரோகித் அவர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்களுக்கு பதவி பிரமாணமும், ரகசியக் காப்பு பிரமாணமும் செய்து வைத்தார். தொடர்ந்து அரசின் பல்வேறு துறைகளின் அமைச்சர்களும் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்களின் தலைமையில் அமைந்துள்ள அரசில் பல்வேறு துறை அமைச்சர்களாகப் பொறுப்பேற்றுக் கொண்ட அமைச்சர் பெருமக்களின் விபரம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. மு.க. ஸ்டாலின்** அவர்கள் பொதுத்துறை, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப்பணி, இந்தியக் காவல் பணி, இந்திய வனப்பணி மற்ற அகில இந்திய பணி, மாவட்ட வருவாய் அலுவலர்கள், காவல், உள்துறை, சிறப்பு முயற்சி, சிறப்புத் திட்ட செயலாக்கம், மாற்றுத் திறனாளிகள் நலத்துறை	
மாண்புமிகு திரு. துரை முருகன் நீர்வளத் துறை அமைச்சர்	சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம், மாநில சட்ட மன்றம், ஆளுநர் மற்றும் அமைச்சரவை, தேர்தல்கள் மற்றும் கடவுச் சீட்டுகள், கனிமங்கள் மற்றும் சுரங்கங்கள்
மாண்புமிகு திரு. கே. என். நேரு நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்	நகராட்சி நிர்வாகம், நகர்ப்பகுதி, குடிநீர் வழங்கல்
மாண்புமிகு திரு. இ. பெரியசாமி கூட்டுறவுத் துறை அமைச்சர்	கூட்டுறவு, புள்ளியியல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர் நலன்
மாண்புமிகு திரு. க. பொன்முடி உயர்கல்வித் துறை அமைச்சர்	உயர்கல்வி உள்ளிட்ட தொழிற்கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல்
மாண்புமிகு திரு. எ. வ. வேலு, பொதுப்பணித் துறை அமைச்சர்	பொதுப்பணிகள், கட்டிடங்கள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள்
மாண்புமிகு **திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம்,** வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர்	வேளாண்மை, வேளாண்மை பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவு சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை, கரும்புப் பயிர் மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், வருவாய்த்துறை மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர்	வருவாய், மாவட்ட வருவாய் நிர்வாகம், துணை ஆட்சியர்கள், பேரிடர் மேலாண்மை
மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில்துறை அமைச்சர்	தொழில்துறை, தமிழ் ஆட்சி மொழி மற்றும் பல தமிழ்ப் பண்பாட்டுத் தொல்பொருள்
மாண்புமிகு திரு. எஸ். இரகுபதி, சட்டத்துறை அமைச்சர்	சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்புச் சட்டம்
மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதித்துறை அமைச்சர்	வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகரமைப்புத் திட்டமிடல் மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, இடவசதி கட்டுப்பாடு, நகரத் திட்டமிடல், நகர் பகுதி வளர்ச்சி, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம்
மாண்புமிகு திரு. கேஆர். பெரிய கருப்பன், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர்	ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரக கடன்கள்

மாண்புமிகு திரு. தா. மோ. அன்பரசன், ஊரக தொழிற்துறை அமைச்சர்	ஊரகத் தொழில்கள், குடிசைத் தொழில்கள் உட்பட சிறு தொழில்கள், குடிசை மாற்று வாரியம்
மாண்புமிகு திரு. மு. பெ. சாமிநாதன், செய்தித்துறை அமைச்சர்	செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, எழுது பொருள் மற்றும் அச்சுத்துறை மற்றும் அரசு அச்சகம்
மாண்புமிகு திருமதி. பி. கீதா ஜீவன், மகளிர் உரிமைத் துறை அமைச்சர்	மகளிர் மற்றும் குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், ஆதரவற்றோர் இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிர்வாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மற்றும் சமூக சீர்திருத்தம் மற்றும் சத்துணவுத் திட்டம்
மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், மீன்வளம் - மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்	மீன்வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம், கால்நடை பராமரிப்பு

மாண்புமிகு திரு. ஆர். எஸ். ராஜகண்ணப்பன், போக்குவரத்துத்துறை அமைச்சர்	போக்குவரத்து, நாட்டுடமையாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்தி சட்டம்
மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், வனத்துறை அமைச்சர்	வனம்
மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர்	உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு
மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்	மின்சாரம், மரபு சாரா எரிசக்தி மேம்பாடு, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு (மொலாசஸ்)
மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர்	கைத்தறி மற்றும் துணி நூல், கதர் மற்றும் கிராம தொழில் வாரியம், பூதானம் மற்றும் கிராம தானம்
மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்	மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்
மாண்புமிகு திரு. பி. மூர்த்தி, வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்	வணிக வரிகள், பதிவு மற்றும் முத்திரைத்தாள் சட்டம், எடைகள் மற்றும் அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டுகள் மற்றும் கம்பெனிகள் பதிவு
மாண்புமிகு திரு. எஸ். எஸ். சிவசங்கர், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்	பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர்மரபினர் நலன்
மாண்புமிகு திரு. பி. கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலைய துறை அமைச்சர்	இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள்
மாண்புமிகு திரு. பழனிவேல் தியாகராஜன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர்	நியீத்துறை திட்டம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம், அரசு ஊழியர்களின் ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதிய சலுகைகள்
மாண்புமிகு திரு. சா. மு. நாசர், பால்வளத் துறை அமைச்சர்	பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி
மாண்புமிகு திரு. செஞ்சி கே. எஸ். மஸ்தான், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர்	சிறுபான்மையினர் நலன், வெளிநாடு வாழ் தமிழர் நலன், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் மற்றும் வக்ப் வாரியம்
மாண்புமிகு திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்	பள்ளிக் கல்வி
மாண்புமிகு திரு. சிவ. வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல் - காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர்கள் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்	சுற்றுச்சூழல் மற்றும் மாசு கட்டுப்பாடு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை
மாண்புமிகு திரு. சி. வி. கணேசன், தொழிலாளர் நலன் - திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்	தொழிலாளர்கள் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, மக்கள் தொகை கணக்கெடுப்பு, நகரம் மற்றும் ஊரக வேலைவாய்ப்பு
மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ், தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்	தகவல் தொழில்நுட்பத் துறை
மாண்புமிகு திரு. மா. மதிவேந்தன், சுற்றுலாத்துறை துறை அமைச்சர்	சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்
மாண்புமிகு திருமதி. என். கயல்விழி செல்வராஜ், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்	ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர்கள் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் தடுப்புப் பிரிவு

ஆபத்துக்கால அவசர உதவிக்கு

5 நொடியில் நம்மைக் காப்பாற்ற

தமிழ்நாடு போலீஸின் அதிரடி ஆண்ட்ராய்டு ஆப். நம்மைக் காக்கும் காவலன் SOS பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் பிரச்சனைகள், கடத்தல், திருட்டு, ஈவ்டீசிங் என அனைத்து சிக்கல்களிலும் இருந்து விடுதலைபெற ப்ளே ஸ்டோர் வழியாக ஒரு செயலி...

KAVALAN-SOS (Download Procedure)

What Control Room will do ?

- On receipt of SOS trigger, user details like name, address etc are identified automatically at SOS desk.
- Current location of the SOS user is automatically plotted on map application and identifies Police station & nearby Patrol vehicle
- Auto Call back will be initiated to SOS user mobile & Control room staff collects details about type of emergency assistance required, proper location or land mark details etc.

- Then via respective Police station/Control room/nearby Patrol vehicle, required Police assistance will be provided to SOS user to solve the issue
- SOS is treated as "High Priority" call at Control room
- Live Tracking of the SOS user is Possible – i.e SOS user's mobility is continuously tracked & monitored at control room (If user didn't exit the SOS app)

- Emergency trigger alert also sent to all registered emergency contact numbers as SMS along with current location link of victim – hence they can also identify their family member / friends location in google map by pressing received link.

Modification of Emergency Contact

- User can also modify the registered emergency contact as per requirement

WOMEN HELP LINE NO : 1091

CHILD HELP LINE NO : 1098

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத்தடுப்புப் பிரிவு

ஆயிரம் விளக்கு காவல் நிலைய வளாகம்,
கிரீம்ஸ் ரோடு, ஆயிரம் விளக்கு, சென்னை - 600 006.
புகார் தெரிவிக்க வேண்டிய மின்னஞ்சல் (E-Mail) முகவரி
dccwc.chennai@gmail.com

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்
TAMIL NADU URBAN LIVELIHOODS MISSION
Empowering Lives

வாழ்வாதார இயக்கம் தந்த பொருளாதார வளர்ச்சி!

திண்டுக்கல் மாவட்டம்

திண்டுக்கல் மாநகராட்சி 12வது வார்டு பகுதியை சேர்ந்த பெண்கள் 12 பேர் சேர்ந்து 'மல்லிகை மகளிர் சுய உதவி குழு' வினை 2008ம் ஆண்டு ஆரம்பித்தனர். விஜயா என்பவர் தலைவியாகவும், தவமணி என்பவர் பொருளாளராகவும் செயல்பட்டு வருகின்றனர். இதில் குழுத் தலைவியின் கணவர் சிங்கப்பூரில் இருக்கும் போது குபேரன் மேடை, அலங்கார தேர்கள் செய்வது போன்ற கைவினை தொழிலை கற்று வந்ததால் இக்குழுவின் உறுப்பினர்களுக்கும் இத்தொழிலை கற்றுக் கொடுத்தார். குழு உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து இத்தொழிலைக் கற்றுக் கொண்டு, சிறிய அளவில் அலங்காரப் பொருட்களை செய்து விற்பனை செய்து வந்தனர்.

இத்தொழிலை பெரிய அளவில் செய்ய இக்குழுவினருக்கு போதிய நிதி வசதி இல்லாததால், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலின்படி, இந்தியன் வங்கி மைக்ரோசாட் கிளையில் ரூ.6,00,000/- வங்கி கடன் பெற்றனர். இவர்கள் செய்யும் தொழிலுக்கான மூலப் பொருட்கள் சீனாவில் மலிவாக கிடைப்பதால் கடந்த 5 வருடங்களாக சீனாவிலிருந்து மூலப் பொருட்களை மொத்தமாக வாங்கி, பெருமளவில் குபேரன் மேடை, அலங்கார

தேர்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்து விற்பனை செய்து வருகின்றனர்.

இக்குழுவினரின் உற்பத்திப் பொருட்களை, வங்கி மற்றும் தனியார் நிறுவனங்களின் ஆண்டு விழாக்களின் போது மொத்தமாக ஆர்டர் செய்து வாங்கி கொள்கின்றனர், மேலும், திருவிழா காலங்களில் அதிக அளவில் விற்பனை செய்து வருகின்றனர். உள்நாட்டில் மட்டுமல்லாது மலேசியா, தாய்லாந்து, சிங்கப்பூர் போன்ற வெளிநாடுகளிலும் தங்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை வருகின்றனர். மேலும், இணையவழி விற்பனையாக, அமேசான் இணையதளம் மூலம் ஆர்டர்களை பெற்று பொருட்களை உடனடியாக அனுப்பி வைக்கின்றனர்.

தங்களின் குழுவிற்கு போதிய நிதி ஆதாரங்கள் இல்லாத நிலையில், உரிய வழிகாட்டுதல்களை வழங்கி, சிறப்பாக தொழில் செய்ய கடனுதவி வழங்கிய தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு மல்லிகை மகளிர் சுய உதவி குழுவின் உறுப்பினர்கள் தங்களின் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம்

வாழ்வாதார இயக்கம் தந்த வளம்!

என் பெயர் வேடியப்பன் (த/பெ. ஆண்டி) நான் கிருஷ்ணகிரி மாவட்டம். ஊத்தங்கரை, காமராஜ் நகர் பகுதியில் வசித்து வரும் நான் ஊத்தங்கரை பேரூராட்சியின் எல்லைக்குட்பட்ட வார்டு எண்1 பகுதியில் வாழைப்பழக் கடை வைத்துள்ளேன். என் குடும்பத்தில் என்னைத் தவிர வேறு யாரும் வருமானம் ஈட்டுவதில்லை.

கொரோனா காலத்தில் போதுமான வருமானம் இல்லாததால் நானும் எனது குடும்பத்தாரும் மிகவும் கஷ்டத்துக்குள்ளானோம். தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின்

வழிகாட்டுதலில் PM SVANIDHI திட்டத்தின் மூலமாக ரூ.10,000/- தொகையினை இந்தியன் வங்கி ஊத்தங்கரை கிளையில் கடனாகப் பெற்றேன். இந்த தொகையை எனது வியாபாரத்தில் முதலீடு செய்து வருவாய் ஈட்டி வருகிறேன். இதன் மூலம் எனது வாழ்வாதாரம் முன்னேற்றம் அடைந்துள்ளது. எங்களின் மேம்பாட்டிற்காக அரும்பாடுபட்டு வரும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு எனது சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஈரோடு மாவட்டம்

வாழ்வில் முன்னேற்றம் தந்த வாழ்வாதார இயக்கம்!

எனது பெயர் ஜீவிதா, நான் ஈரோடு மாவட்டம், லக்கம்பட்டி பேரூராட்சி, காலேஜ் ரோடு பகுதியில் வசித்து வருகிறேன். நான் ஆசிரியர் பயிற்சி முடித்து எந்த ஒரு வேலைக்கும் செல்லாமல் வீட்டிலேயே இருந்து வந்தேன். எங்களது பகுதியின் சமுதாய அமைப்பாளர் என்னை சந்தித்து வாழ்வாதார மேம்பாட்டிற்காக மகளிர் சுய உதவி குழுவில் இணையுங்கள் என கூறி அருகில் உள்ளவர்களிடம் பேசி 'மலர் மகளிர் சுய உதவி குழுவை' 2019ஆம் ஆண்டு தொடங்கி எங்களது குழுவை தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் மகளிர் திட்டத்தில் பதிவு செய்து கொடுத்து, சுழல் நிதி ரூ.10,000/- பெற்றுத் தந்ததுடன் 6 மாதத்திலேயே வட்டி மானியத்துடன் வங்கி கடன் பெற்றுத் தந்தார்.

அதைத் தொடர்ந்து நான் சுய உதவி குழுவின் மூலம் கிடைக்கும் பயன்களை அருகில் இருப்போருக்கு எடுத்துரைத்து பல சுய உதவி குழுக்களை உருவாக்கினேன். இதைப் பார்த்த எங்கள் பகுதி சமுதாய அமைப்பாளர் என்னை சமுதாய வளப் பயிற்றுனராக லக்கம்பட்டி பேரூராட்சிக்கு நியமித்தார். நான் 5க்கும் மேற்பட்ட குழுக்களை அமைத்தேன். மேலும், பகுதி அளவிலான கூட்டமைப்பு உருவாக்க வேண்டும் என கூறியதால் எங்கள் பகுதியில் உள்ள 10 குழுக்களை இணைத்து லக்கம்பட்டி நகர்ப்புற பகுதி அளவிலான மகளிர் கூட்டமைப்பை தொடங்கி, அதில் நான் பொருளாளராக இருந்து வருகிறேன்.

எனது குழு சார்பில் எனக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்தி கொடுக்கும் பொருட்டு மெழுகுவர்த்தி தயாரிக்கும் பயிற்சியை எனக்கு வழங்கி, நான் தயாரிக்கும் பல்வேறு வகையான மெழுகுவர்த்திகளை மகளிர் திட்டம் சார்பில் நடைபெறும் கண்காட்சிகளில் விற்பனை செய்திட வழிவகை செய்தனர்.

வருமானத்திற்கு வழி இன்றி வீட்டிலேயே முடங்கிக் கிடந்த என்னை பகுதி அளவிலான கூட்டமைப்பு பொருளாளராகவும், சமுதாய வள பயிற்றுனராகவும் உருவாக்கி சமுதாயத்தில் நல்ல நிலைக்கு கொண்டு வந்த தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தென்காசி மாவட்டம்

கோவிட்-19 காலத்தில் கை கொடுத்த வாழ்வாதார இயக்கம்!

பீர் முகம்மது என்கிற நான் கடந்த 15வருட காலமாக தென்காசி மாவட்டம், புளியங்குடி நகராட்சி பகுதியில் வசித்து வருகிறேன். நான் எனது குடும்ப தொழிலான பஞ்சு மெத்தை மற்றும் தலையணை போன்ற பொருட்களை தயாரித்து விற்பனை செய்து வருகிறேன். கொரோனா காலங்களில் எனது தொழில் மிகவும் நலிவடைந்து கஷ்டமான சூழ்நிலையில் தள்ளப்பட்டிருந்தேன்.

இந்நிலையில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் எனக்கு தனிநபர் கடனாக (SEP-I) ரூ.1,00,000/- வங்கியின் மூலம் வழங்கப்பட்டது. நலிவுற்று இருந்த எனது தொழிலை மீண்டும் மேற்கொள்ள

இந்தக் கடன் தொகை மிகவும் உதவிகரமாக இருந்தது. இதனால் எனது வியாபாரமும் வளர்ச்சியடைந்தது. தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம் பெறப்பட்ட இக்கடன் தொகை என் வருமானத்தை அதிகரித்து என் வாழ்வாதாரம் வளர்ச்சியடைய பெரிதும் உதவியாக இருந்தது. எனது உற்பத்தி பொருட்களை நேரடியாக மகளிர் சுய உதவி குழுக்களுக்கு விற்பனை செய்வதால், விற்பனையிலும் வருமானத்திலும் வளர்ச்சியடைந்துள்ளேன். எனது தொழிலை விரிவுபடுத்தி வருமானத்தை உயர்த்திட வழிவகை செய்த தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டம்

ஊரடங்கு காலத்தில் வாழ்வு தந்த வாழ்வாதார இயக்கம்!

என் பெயர் லட்சுமி, என் கணவர் பெயர் மூர்த்தி. புதுக்கோட்டை சந்தைப்பேட்டையில் வசித்து வரும் நான் கடந்த 10 வருடங்களாக பாய், முறம், பனை ஓலை விசிறி, ஈக்கிமாறு, ஈச்சங் கூடை, ஓலை பாய் போன்றவற்றை விற்பனை செய்து வருகிறேன். பொருட்களை சாலையோரங்களில் வைத்து விற்பனை செய்வதுடன், தெருத் தெருவாகவும், குக்கிராமங்களுக்குச் சென்றும் விற்பனை செய்து வருவதன் மூலம் மாதத்திற்கு ரூ.5,300/- முதல் ரூ. 6,000/- வரை வருமானம் பெற்று வந்தேன். எனக்கு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் உதவியுடன் தெருவோர வியாபாரிகளுக்கான அடையாள அட்டை (Bio - Metric ID) வழங்கப்பட்டது.

கடந்த மார்ச் மாதம் கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்த போடப்பட்ட ஊரடங்கின் காரணமாக 5 மாதங்களாக எங்களது வியாபாரத்தை தொடர முடியாமல் வருமானத்தை இழந்து வாடினேன். இந்த சூழ்நிலையில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலின் கீழ் தெருவோர வியாபாரிகளுக்கான PM SVANIDHI திட்டம் மூலம் கடனுதவி பெற புதுக்கோட்டை மாவட்ட நகர்ப்புற வாழ்வாதார இயக்க அலுவலகம் சென்று இணையம் வாயிலாக விண்ணப்பித்தேன். எனது விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டு நான் வங்கி கணக்கு வைத்துள்ள PNB வங்கியின் மூலம் ரூ.10,000/- கடனுதவி பெற்றேன். அத்தொகையினை பயன்படுத்தி மூலப் பொருட்களை கொள்முதல் செய்து தற்போது எனது வியாபாரத்தை தொடங்கி மீண்டும் எனது வாழ்வாதாரத்திற்கு தேவையான தொகையை ஈட்டி வருகிறேன்.

PM SVANIDHI திட்டத்தின் மூலம் கடனுதவி வழங்கி, எனது வாழ்வாதாரத்தை மேம்படுத்திட உதவிய தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டம்

சுய தொழில் தொடங்க ஊக்குவித்த இயக்கம்!

எனது பெயர் அசோகவல்லி, நான் எனது குடும்பத்துடன் கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 47, MGR நகர் குடிசை பகுதியில் வசித்து வருகிறேன். எனது கணவர் கூலி வேலை செய்வதன் மூலம் கிடைக்கும் சொற்ப வருமானத்திலேயே எனது குடும்ப செலவுகள் அனைத்தையும் மேற்கொள்ள வேண்டியிருந்ததால் எனது குடும்பத்தின் அத்தியாவசிய தேவைகள் தவிர்த்து இதர தேவைகளை என்னால் பூர்த்தி செய்ய இயலவில்லை.

எனது குடும்ப வறுமையை கருத்தில் கொண்டு ஏதாவது சுய தொழில் செய்து வருமானம் ஈட்டி முன்னுக்கு வர வேண்டும் என தீர்மானித்தேன். நாகர்கோவில் நகரின் சுற்று வட்டார மலை கிராமங்களில் அதிகமாக கிடைக்கும் நறுமண பொருட்கள் மற்றும் மசாலாப் பொருட்களை மொத்த விலைக்கு கொள்முதல் செய்து அதை நடுத்தர மக்களின் வீட்டு தேவைகளுக்கு ஏற்ப சிறு சிறு பொட்டலங்களில் அடைத்து வினியோகம் செய்வதுடன், எலுமிச்சை, மாங்காய், பூண்டு போன்ற பொருட்களை கொண்டு ஊறுகாய் தயாரித்து விற்பனை செய்யும் தொழிலையும் செய்யலாம் எனவும் முடிவு செய்தேன். மேற்படி தொழிலுக்கு தேவையான முதலீடுத் தொகை ஒரு கேள்விகுறியாக இருந்து வந்தது.

அச்சமயம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் அமைக்கப்பட்ட சுய உதவி குழுக்களை கண்காணிக்கும் பொருட்டு நாகர்கோவில், மாநகராட்சி சமுதாய அமைப்பாளர் எங்கள் பகுதிக்கு வந்த பொழுது நான் என்னுடைய சூழ்நிலையினை குறித்து எடுத்துரைத்தேன். அவர்கள் தொழில் தொடங்குவதற்கு இந்து கல்லூரி கிளை, தனலெட்சுமி வங்கியிலிருந்து ரூ.1,90,000/- வங்கி கடன் பெற்றுத் தந்தனர். அந்தத் தொகையை மூலதனமாகக் கொண்டு நான் இப்பொழுது நல்ல முறையில் தொழிலை நடத்தி வருகிறேன். இதன் மூலம் எனக்கு மாதம் ரூ.5,000/-த்திலிருந்து ரூ.6,000/- வரை வருமானம் கிடைத்து வருகிறது. எனக்கு இந்த தொழில் தொடங்குவதற்கு ஊக்குவித்த தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

கள்ளக்குறிச்சி மாவட்டம்

வறுமையிலிருந்து மீளச் செய்த வாழ்வாதார இயக்கம்!

கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதியில் உள்ள மேல் தெருவில் வசிக்கும் என் பெயர் ஏழுமலை. நான் பத்து வருடங்களாக எங்கள் பகுதியில் உள்ள கட்ட கோபுரத்தின் எதிரில் உள்ள தெருவோரத்தில் கடை வைத்து பூஜை பொருட்கள் மற்றும் தேங்காய் போன்றவற்றை விற்பனை செய்து வருகின்றேன். எனது கடையில் வியாபாரம் நன்றாக நடந்து வந்தது. இந்நிலையில் கொரோனா பெருந்தொற்று காரணமாக ஊரடங்கு அறிவித்த சமயத்தில் எனது வியாபாரம் தடைபட்டு வாழ்வாதாரமும் நலிவுற்றது. அந்த தருணத்தில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் தெருவோர வியாபாரிகளுக்கு கடனுதவி வழங்கும் பாரத பிரதமரின் PM SVANIDHI திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

PM SVANIDHI திட்டம் குறித்த விபரங்களை தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம் தெரிந்து கொண்ட நான், எங்கள் பகுதி சமுதாய ஒருங்கிணைப்பாளர் மூலம் இணைய தளத்தில் என்னுடைய விவரங்களை பதிவு செய்தேன். எனது விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டு எனக்கு PM SVANIDHI திட்டத்தின் கடனுதவியாக ரூ.10,000/-த்தை இந்தியன் வங்கியின் மூலம் பெற்றேன். நான் பெற்ற அந்த தொகையை மூலதனமாக வைத்து மீண்டும் வியாபாரம் செய்து, நல்ல முன்னேற்றம் அடைந்தேன். இதனால் நானும் எனது குடும்பமும் மகிழ்ச்சி அடைந்தோம். இத்திட்டத்தின் மூலம் பெற்ற கடன் தொகையையும் தவணை தவறாமல் மாதந்தோறும் சிறந்த முறையில் செலுத்தி வருகின்றேன்.

எனக்கு இந்த திட்டத்தை அறிமுகப்படுத்திய தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு எனது சார்பாகவும், எனது குடும்பத்தின் சார்பாகவும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்றக் கச்சேரி

அன்புள்ள முற்றம் வாசகர்களே

சுய உதவி குழுவின் ஊக்குனர் மற்றும் உறுப்பினர்களிடையே நடைபெறும் உரையாடல்கள் மற்றும் கேள்வி பதில்கள் வாயிலாக மகளிர் சுய உதவி குழுக்களின் முன்னேற்றத்திற்காக செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் குறித்த விபரங்களை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் முற்றக் கச்சேரி வெளியிடப்படுகிறது. இது உங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இனி முற்றக் கச்சேரிக்குள் போவோமா...

இந்த மாதம் கொரோனா வைரஸ் தொற்று பரவல் தடுப்பு விழிப்புணர்வு குறித்து சுய உதவிக் குழுவின் ஊக்குனர் வாணி, உறுப்பினர்களான கமலா மற்றும் ராணி உரையாடுகின்றனர்.

சுய உதவி குழுவின் அலுவலகத்தில் ஊக்குனர் வாணி அமர்ந்திருக்கிறார். அப்போது குழுவின் உறுப்பினர்களான ராணியும், கமலாவும் வருகின்றனர். அலுவலகத்தின் வாசலில் இருக்கும் தண்ணீர் குழாயில் கை கால்களை சோப்பு போட்டு நன்கு கழுவி விட்டு, முகக் கவசம் அணிந்து வரும் இருவரையும் ஊக்குனர் வாணி வரவேற்கிறார்.

வாணி : வா... ராணி... வா கமலா... நல்லா இருக்கீங்களா?

ராணி : நல்லா இருக்கோம் அக்கா... நீங்க எப்படி இருக்கீங்க?

வாணி : நல்லா இருக்கேன்...

ராணி : எதுக்கு அக்கா எங்களை அவசரமா வரச் சொன்னீங்க? என்ன விஷயம்?

கமலா : என்ன ஏதாவது அவசரமான செய்தியா அக்கா?

வாணி : ஆமா... கமலா.. ரொம்ப அவசரமான விஷயம்தான், நீங்க கொரோனா பரிசோதனை செய்து விட்டீர்களா?

கமலா : அது எதுக்கு அக்கா... தேவையில்லாம? எங்களுக்கெல்லாம் கொரோனா வராது அக்கா...

ராணி : நாங்கதான் முகக் கவசம் போட்டு இருக்கோம். அடிக்கடி சோப்பு போட்டு கைகளைக் கழுவுறோம். இதையெல்லாம் மீறியா கொரோனா வரப்போவுது அக்கா?

வாணி : என்ன சொல்றீங்க நீங்க? முகக் கவசம் போட்டுக்கிட்டு, சோப்பால கைய கழுவினா மட்டும் கொரோனா வராதுன்னு யார் சொன்னாங்க?

கமலா : எல்லாருந்தான் சொல்றாங்க...

வாணி : அவங்க சொன்னாங்க... இவங்க சொன்னாங்கன்னு கேட்டுட்டு அலட்சியமா இருந்தா நமக்குதான் பாதிப்புன்னு தெரியுமா உங்களுக்கு?

கமலா : என்னக்கா பாதிப்பு அது இதுன்னு ஏதோதோ சொல்றீங்க...?

ராணி : அதானே என்ன பெருசா பாதிப்பு வரப்போவுது...?

வாணி : என்ன பாதிப்புன்னு சொல்றேன் கேளுங்க. இப்பா கொரோனா வைரஸ் தொற்று பரவலோட இரண்டாவது அலை வேகமா மக்களை தாக்கிட்டு இருக்கு. ஏராளமானவங்க பாதிக்கப்பட்டு சிகிச்சை எடுத்திட்டு இருக்காங்க என்ற விபரங்கள் உங்களுக்கு தெரியுமா...?

ராணி : அடிக்கடி டி.வி. செய்தியில சொல்லுவாங்க, அதைக் கேட்டு இருக்கோம். அவ்வளவுதான் எங்களுக்குத் தெரியும்.

வாணி : கொரோனா வைரஸ் தொற்று பரவலை தடுக்க அரசு போர்க்கால அடிப்படையில பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துட்டு வருது. வைரஸ் தொற்றால பாதிச்சவங்களுக்கு தேவையான மருத்துவ வசதிகளையும் செய்து வருது.

கமலா : சரி அக்கா... கொரோனா தொற்று பரவலைத் தடுக்க நாம என்ன செய்வது?

வாணி : முகக் கவசம் போடணும், அடிக்கடி சோப்பு போட்டு கைகளை நல்லா கழுவணும், சமூக இடைவெளியைக் கடைபிடிக்கணும், தேவையில்லாம வெளியில் போய் வருவதைத் தவிர்க்கணும்...

கமலா : இப்படியெல்லாம் செய்யறதால நமக்கு கொரோனா வராதா அக்கா?

வாணி : இப்படியெல்லாம் செய்வதன் மூலம் கொரோனா பரவலைத் தடுக்க முடியும். அதுமட்டுமில்லாமா கொரோனா பரிசோதனையை செய்துக்கணும், கொரோனா தடுப்பூசிகளையும் கண்டிப்பாக போட்டுக்கணும்.

ராணி : தடுப்பூசி போட்டுக்கணுமா...?

வாணி : ஆமா... நாம எவ்வளவுதான் பாதுகாப்பாக இருந்தாலும் கொரோனா தடுப்பூசிதான் நம்மல பாதுகாக்கும் கவசமாக இருக்கும்.

கமலா : நீங்க சொல்வது சரியக்கா... ஆனா தடுப்பூசி போட்டுக்க எனக்கு பயமா இருக்கு அக்கா...

வாணி : தடுப்பூசி போட்டுக்க பயமா இருக்க... என்ன சொல்றீங்க... சுய உதவிக் குழு பெண்களுக்கு கொரோனா குறித்த விழிப்புணர்வு அதிகம் இருக்கும் அப்படின்னு சொல்லுவாங்க... ஆனா, நீங்க தடுப்பூசி போட்டுக்க பயமா இருக்குன்னு சொல்றீங்க...

கமலா : அதுவந்துக்க எங்க வீட்டுக்கு பக்கத்துல இருக்கறவங்க எல்லாம் தடுப்பூசி போட்டுக்கிட்டா பக்க விளைவுகள் வரும், உடம்பு சரியில்லாம போகும் அப்படின்னு பேசிக்கிட்டாங்க அக்கா... அதனாலதான நாங்க தடுப்பூசி போட்டுக்க தயங்கறோம்...

ராணி : கமலா சொல்லறது சரிதான் அக்கா...

வாணி : தடுப்பூசி போட்டுக்கிட்டா பக்கவிளைவுகள் வரும், உடல் நலக்குறைவுகள் வரும் என்று சொல்வது தப்பு. தடுப்பூசிதான் நமக்கு கொரோனா வராம தடுக்குங்கறத தெரிஞ்சிக்குங்க. அரசு மருத்துவமனைகளில் கொரோனா தடுப்பூசிகளை இலவசமாக போடறாங்க. உடனே நீங்க போய் தடுப்பூசி போட்டுக்குங்க...

கமலா : நீங்க சொன்னா சரியக்கா... உடனே நாங்க எங்க குடும்பத்தேட் போய் தடுப்பூசி போட்டுக்கறோம்.

ராணி : எங்க குடும்பம் மட்டுமல்ல அக்கம் பக்கத்துல இருக்கறவங்களுக்கும் விழிப்புணர்வு தந்து தடுப்பூசி போட்டுக்க கூட்டிட்டு போறோம். சரியா அக்கா...?

வாணி : ரொம்ப சந்தோஷம். அதுமட்டுமல்ல நான் முதல்லயே சொன்ன மாதிரி முகக் கவசம் போடணும், அடிக்கடி சோப்பு போட்டு கைகளை நல்லா கழுவணும், சமூக இடைவெளியைக் கடைபிடிக்கணும், தேவையில்லாம வெளியில் போய் வருவதைத் தவிர்க்கணும்... இதை நீங்க மட்டும் கடைபிடிச்சா போதாது. மத்தவங்களையும் கடைபிடிக்க சொல்லணும். சரியா...?

கமலா : கண்டிப்பா செய்யறோம் அக்கா...

கமலா, ராணி இருவரும் வாணியிடம் விடைபெற்று செல்கின்றனர்.

(முற்றக் கச்சேரி தொடரும்)

மூத்த தமிழ்... !

முதன் முதல் தோன்றிய முதன்மைத் தமிழே!
முன்னவர் வகுத்த காப்பியத் தமிழே!
மதலைபேசும் இனிய தமிழே!
மலர்களாக மணக்கும் தமிழே!
நிதமும் எழிலிளம் கன்னித் தமிழே!
நாடெல்லாம் ஒலிக்கும் நனித்தேன் தமிழே!
உதய மாகும் இதயத்துள்ளே
உறவுகள் மலர வாழும் தமிழே... !

எங்களின் வாழ்வும் எங்களின் வளமும்
ஏற்றம் தந்திடும் ஈடிலாத் தமிழே... !
பொங்கும் உள்ளம் பூரிப்படைந்திடும்
புவியெலாம் வியக்க போற்றிடும் தமிழே... !
சங்கம் வளர்த்த மங்காத தமிழே!
சரித்திரம் படைத்த செம்மொழித் தமிழே!
தங்கத் தமிழர் தலைகள் நிமிர்ந்திட
தனித்துவம் பெற்றுத் திகழ்ந்திடும் தமிழே... !

வீரம் செறிந்து விளைந்த மண்ணில்
வெற்றிப் பாடிடும் வான்புகழ் தமிழே... !
கீரர் விடுத்த சொல்லெனும் அம்பில்
குற்றம் உணர்த்திய கவின்மிகு தமிழே... !
பூரண நிலவை கண்முன் காட்டிய
பட்டர் பாடலில் ஒளிர்ந்த தமிழே... !
பாரதி பாட்டில் வள்ளுவர் குறளில்
பாங்குறும் இனிய செம்மொழி வாழ்கவே... !

கவிஞர் பரந்தூர் இராமசாமி
அமிழ்தத் தமிழ் இல்லம்,
எண்.15, விவேகானந்தர் தெரு, கபிலர் நகர்,
மணவாள நகர் (அஞ்சல்) - 602 202.
திருவள்ளூர் மாவட்டம்.
தொடர்புக்கு : 90034 92723.

அரவை ஆலை! ஊரில் உயர்வு!

நான் கடந்த 2 வருடங்களாக சென்னையில் அசன்டர் சொல்யுஷன் என்கிற தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தேன். தொழில் ரீதியாக பரபரப்பாக இயங்கி வந்த எனக்கு போதுமான அளவு ஊதியம் கிடைத்து வந்தது. எனது குடும்பத்தை மிகவும் நல்ல முறையில் பராமரித்தும் வந்தேன்.

இந்த சூழ்நிலையில் எதிர்பாராத விதமாக கோவிட் பெருந்தொற்று வந்து நாடெங்கும் முழு ஊரடங்கு போடப்பட்டதால், நான் பணி செய்து வந்த நிறுவனத்தில் அனைத்து பணியாளர்களையும் வேலையை விட்டு நிறுத்தி விட்டனர். இதனால் சொந்த ஊருக்குத் திரும்பி வந்தேன். குடும்பம் நடத்த என்ன செய்வது என்று தெரியாமல் தத்தளித்த நிலையில், எனது தாயார் உறுப்பினராக இருந்த ஜெயம் மகளிர் சுய உதவி குழுவில், புலம் பெயர்ந்து திரும்பிய இளைஞர்களுக்கு, சுயதொழில் துவங்க, தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் மூலம் கடன் வழங்க இருப்பது எனக்குத் தெரிய வந்தது.

எங்கள் ஊராட்சியில் செயல்படும் கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தின் மூலம் தொழில் முதலீட்டுக்கு விண்ணப்பம் அளித்தேன். விண்ணப்பித்த ஒரு வாரத்திற்குள் எனக்கு ரூ. 1,00,000/- முதலீட்டுக் கடன் வழங்கினார்கள். இந்த கடன் தொகையை வைத்து மினி ரைஸ்மில் தொழில் செய்து வருகிறேன். இதன் மூலம் எனக்கும், என் குடும்பத்திற்கும் தொழில் உத்தரவாதம் கிடைத்துள்ளது. மேலும் இதில் நல்ல வருமானமும் கிடைக்கிறது. நடத்தி வரும் இந்தத் தொழிலை விரிவுப்படுத்த, அனைத்து வகையான சிறு தானியங்களை அரைக்கும் இயந்திரம் அமைக்கவும் திட்டமிட்டுள்ளேன். இதற்கான நிதி எனக்கு கிடைக்கும் பொழுது என் தொழில் வளத்தை நான் மேலும் பெருக்கிக்கொள்வேன்.

வேலையும், வருமானமும் இன்றி இருந்த எனக்கும், என் குடும்பத்திற்கும் தகுந்த நேரத்தில் வறுமையை போக்க உதவியாக இருந்த தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்திற்கும், எங்கள் கிராம வறுமை ஒழிப்பு சங்கத்திற்கும் மற்றும் ஜெயம் மகளிர் சுயஉதவி குழுவிற்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நகரத்தில் ஊதியத்தை மட்டுமே நம்பியிருந்த எனக்கு, நான் துவங்கிய சொந்தத் தொழில், நிலையான பொருளாதார தன்மையைத் தந்துள்ளது. நமது ஊரில் தொழில்களைத் தொடங்கினால் சம்பாதிக்கலாம் என்பதையும் அறிந்தேன். புதியவற்றை படிக்கவும் கிராமத்தில் இருக்கும் வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ளவும் திறந்த மனதுடன் இருக்க தெரிந்து கொண்டேன்!

என். கார்த்திக், எட்டிக்குட்டப்பட்டி ஊராட்சி, ஓமலூர் வட்டாரம், சேலம் மாவட்டம்.

தூய்மையான குடிநீர்! நிறைவான முனைவு!

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தை சேர்ந்த நவீன் B.E., படித்துள்ளார். இவர் கடந்த 3 வருடங்களாக சென்னையில், ஒரு தனியார் நிறுவனத்தில் தண்ணீரை சுத்திகரிக்கும் RO சிஸ்டம் விற்பனையாளராக பணிபுரிந்து வந்தார். தனது பணிக்காலத்தில் 1500க்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களுக்கு RO இயந்திரம் விற்பனை செய்தும், பழுது பார்த்தும் வந்தார். இவர் செய்து வந்த இவரது பணிகள் இவரை திறமையான RO தொழில் வல்லுநராக உயர்த்தியிருந்தது.

பரபரப்பாக இயங்கி வந்த இவரது தொழில் வாழ்க்கையில், எதிர்பாராத விதமாக வந்தது பொதுமுடக்கம் எனும் மிகப் பெரிய தடை. இந்த

எதிர்பாராத சூழலால் கடந்த வருடம் இவர் பணியாற்றி வந்த நிறுவனம் இவரையும், இவரைப் போன்ற இன்னும் சிலரையும் வேலையில் இருந்து நிறுத்தி விட்டது. செய்வதறியாது குழம்பி நின்ற நவீன், சில வாரங்கள் சென்னையிலேயே வேறு நிறுவனங்களில் வேலை தேடி அலைந்தார். எங்கும் வேலை கிடைக்காத நிலையில், ஒரு தீர்க்கமான முடிவுடன் சென்னையை விட்டு சொந்த ஊருக்குப் புறப்பட்டார்.

சொந்த ஊருக்கு வந்து சேர்ந்த நவீன், வேலையும் இல்லாமல், வருமானமும் இல்லாமல் வாழ்க்கையில் நடை போட முடியாது என்று முடிவு செய்து, தான் தேர்ச்சி பெற்ற RO தொழில் திறமையை கொண்டு சொந்தமாக தொழில் துவங்க திட்டமிட்டார். சொந்தமாக தொழில் துவங்க பணத்திற்காக அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்த பொழுது இவருக்கு கிடைத்தது அந்த நற்செய்தி.

தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் மூலம், புலம்பெயர்ந்து மீண்டும் திரும்பிய, திறம் மிக்க இளைஞர்களுக்கான தொழில் முதலீட்டிற்கு சிறப்பு நிதி வழங்கப்படுகின்றது. இந்த நிதியை பெற்றால் தொழில் துவங்க முடியும் என்கிற நம்பிக்கை இவருக்கு பலத்தை தந்தது. உடனடியாக இவரது கிராமத்தில் உள்ள வறுமை ஒழிப்பு சங்கத்தின் மூலமாக விண்ணப்பம் அளித்தார். இவர் அளித்த விண்ணப்பத்தின் அடிப்படையில் இவரது வீடு மற்றும் தொழில் துவங்கவுள்ள இடத்தை கள ஆய்வு செய்து, இவருக்கு முதலீட்டு நிதிக் கடன் வழங்க அனுமதி அளிக்கப்பட்டது.

இதன் அடிப்படையில் தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் மூலம் ரூ.1,00,000/- கடனுதவி பெற்று, பேரூர் ஊராட்சியில் சுயமாக *RO System Sales and Service* என்ற பெயரில் நிறுவனத்தை துவக்கி, 5 ஊழியர்களை கொண்டு, திருச்சி மற்றும் கரூர் மாவட்டம் முழுவதும் *RO System* வழங்கி வருகிறார்.

சென்னையில் RO சிஸ்டத்திற்கு உள்ள பெருமளவுத் தேவை திருச்சி மற்றும் கரூர் மாவட்டங்களில் இல்லாததால், ஒவ்வொரு பகுதியிலும் இதைப்பற்றிய விழிப்புணர்வும் அளித்து வருகிறார். *RO* சிஸ்டத்தின் மூலம் பெறப்படும் தண்ணீர் உடல் நலத்திற்கு பாதுகாப்பானது என்பதை இந்த பகுதி மக்களுக்கு தெளிவூட்டி, தெளிந்த தூய்மையான தண்ணீரை பருகிட வழிகாட்டி வருகிறார்.

இங்கு இவரது RO தொழிலுடன் இன்னும் சில புதிய முயற்சிகளை ஒருங்கிணைத்து மேலும் தொழில் வளத்தை பெருக்க திட்டமிட்டு செயல்படுத்தி வருகிறார். அதில் ஒரு புதுமையான திட்டம்தான் 'சோலார் பவர் சிஸ்டம்' இந்த சோலார் பவர் சிஸ்டத்தை வீடுகளுக்கும், கடைகளுக்கும் பொருத்தி, இதன் மூலம் பசுமைச் சூழலுக்கும் வழிவகுத்து வருகிறார். இந்த சோலார் பவர் சிஸ்டத்தைப் பொருத்த இவரது நண்பரின் துணை மிகவும் முக்கியம் வாய்ந்தாக உள்ளது. இவரது துணையைக் கொண்டு பல வீடுகளுக்கு இன்வெர்ட்டர்கள் சப்ளை செய்யவும் முயற்சி செய்து வருகிறார்.

சுயதொழில் துவங்கிய மகிழ்ச்சியும், நண்பரின் துணையுடன் தொடரும் தொழில் முன்னேற்றமும் இவருக்கும் இவரது குடும்பத்திற்கும் மட்டுமல்லாது நண்பர் மற்றும் ஊழியர்களுக்கும் ஒளிமயமான எதிர்காலத்தை முன் நிறுத்தியுள்ளது.

நவீன், புலம் பெயர்ந்து மீண்டும் திரும்பிய இளைஞர், திருச்சிராப்பள்ளி.

துபாயில் தொழில் நின்றது! சொந்த ஊரில் தொழில் துவங்கினேன்!

மதுரை மாவட்டம், கொட்டாம்பட்டி வட்டாரம், கச்சிராயன்பட்டி ஊராட்சியில் உள்ள பசுமை பொங்கும் ராமநாதபுரம் என்ற கிராமத்தில் பிறந்து வளர்ந்தவன் நான். என்னை அன்பும் அரவணைப்பும் தந்து வளர்த்தவர் எனது தாயார் முத்துப்பேச்சி அம்மாள். இவர் சுபம் சுயஉதவிக் குழுவில் செயலாற்றி வருகிறார்.

நான் கடந்த 3 ஆண்டுகளாக துபாயில் (சார்ஜா) தச்சராக பணியாற்றி வந்தேன். கட்டிடங்கள் வானுயர்ந்து நிற்கும் வெளிநாட்டில் வேலை செய்தபடி அங்கு வாங்கிய ஊதியத்தை என் செலவுக்குப் போக, சொந்த ஊரில் உள்ள என் தாயாருக்கு அனுப்பி வந்தேன். சில ஆண்டுகளில் ஓரளவுக்கு செல்வ வளத்தை சேர்த்துவிடலாம் என்று எண்ணியிருந்த வேளையில், நான் வேலை செய்துகொண்டிருந்த நிறுவனத்தில் அறிவிக்கப்பட்டது அந்த திடீர் அறிவிப்பு.

ஆம், துபாய் முழுவதும் கோவிட் பொது முடக்கம் அறிவிக்கப்பட்டதால் தொடர்ந்து வேலை வழங்க முடியாத சூழலில் பலரை தங்கள் சொந்த நாட்டுக்கு கிளம்பச் சொல்லி உத்தரவு வழங்கப்பட்டது. அவர்களில் ஒருவனாக கடந்த ஆண்டு மார்ச் 21ஆம் தேதியன்று என் தாய்நாட்டில் இருக்கும் சொந்த ஊருக்குத் திரும்பி வந்தேன்.

என்னதான் சொந்த ஊராக இருந்தாலும் செழிப்பான பூமியில் நான் மட்டும் வேலை

இல்லாமல் இருந்தால் சரியாக இருக்காது என்று முடிவு செய்தேன். நான் ஏற்கனவே செய்து வந்த தச்சர் தொழிலை எனது சொந்த ஊரிலேயே செய்யலாம் என்று முடிவு செய்தேன். ஆனால் அதற்கு சற்று முதலீடு தேவைப்பட்டது. வேலையும் இன்றி, வருமானமும் இன்றி இருக்கும் நேரத்தில் தொழில் துவங்க எப்படி நிதி திரட்டுவது என்று சிந்தித்துக்கொண்டிருந்த சமயத்தில்தான், தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தில், புலம் பெயர்ந்து மீண்டும் திரும்பிய திறம் மிக்க இளைஞர்களுக்கு தொழில் முதலீட்டு நிதி வழங்குவதாகக் கேள்விப்பட்டேன்.

என் தாய் உறுப்பினராக உள்ள பி. சுபம் மகளிர் குழுவின் ஒப்புதலுடன் எனது தொழில் முதலீட்டிற்கு ரூ. 2,09,000/- கேட்டு விண்ணப்பித்தேன். எனது உண்மை நிலையை கள ஆய்வு செய்து, எங்கள் கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தின் மூலம் ரூ. 1,00,000/- கடனுதவியை எனது தொழிலைத் துவங்க காசோலையாக வழங்கினார்கள். மீதம் தேவைப்படும் தொகைக்கு வங்கி இருப்பு மற்றும் குடும்பத்தில் உள்ளோர் அளித்த நிதி உதவியைக் கொண்டு தொழிலை ஆரம்பித்தேன்.

நான் ஆரம்பித்த தச்சுத் தொழில் மூலமாக குடும்பத்தில் உள்ளவர்களுக்கு புதிய உற்சாம் பூத்துள்ளது. மேலும் என் குடும்பத்தின் வாழ்வாதாரம் உயர்ந்துள்ளது. தொழில் வளர்ச்சியும் அடைந்து வருகிறது. எனக்கு மாத வருமானமாக ரூ. 15,000 கிடைக்கிறது. இதில் என் குடும்ப சேமிப்பிற்குப் போக, நான் தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்திலிருந்து வாங்கியிருந்த கடனை தொகையை மாதத்திற்கு 3,000 ரூபாய் இரண்டு தவணைகள் வீதம் செலுத்தி வருகிறேன்.

வெளிநாட்டிலிருந்து விரக்தியில் வந்த நான், சொந்த ஊரில் கிடைத்த வாய்ப்புகளையும், உதவிகளையும் கண்டு மகிழ்ச்சி அடைகிறேன்! எனக்கும் என் குடும்பத்தாருக்கும் உறுதுணையாக நின்ற தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்திற்கு என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குமரக்கண்ணன், தச்சுத் தொழில். புலம்பெயர்ந்து மீண்டும் திரும்பிய இளைஞர்.

ஆண்டு கோவிட் பொது முடக்கத்தால் என்னால் தென்னந் துடைப்பங்களை விற்பனை செய்ய முடியவில்லை. வருமானம் இன்றி தவித்து வந்த நேரத்தில் எனக்கு தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தில் இருந்து ஆதரவு கிடைத்தது.

எங்கள் ஊராட்சியில் உள்ள கிராம வறுமை வறுமை ஒழிப்பு சங்கம் மூலம் தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் கீழ், கோவிட் சிறப்பு நிதி உதவி தொகுப்பின் மூலம், மாற்றுத்திறனாளி மற்றும் நலிவடைந்தோருக்கு கடன் வழங்குவதை அறிந்தேன். அந்த நிதியைப் பெறுவதற்காக விண்ணப்பித்து, ரூ.15,000/ தொழில் முதலீட்டு நிதி உதவி பெற்று தற்போது எனது தொழிலை வழக்கம்போல் நடத்தி வருகிறேன். எனது வாழ்வாதாரத்தை மீண்டும் மீட்டுக் கொடுத்த தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்திற்கு எனது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பி. சரிதா, வேப்பூர் ஊராட்சி, கேவி குப்பம் வட்டாரம், வேலூர் மாவட்டம்

அரைத்த மாவு ! சுவையான இட்லி தோசை !

சேரகுளம் மற்றும் அதனை சுற்றி உள்ள ஊராட்சிகளில் தோசை மாவு அரைத்து நான் விற்பனை செய்து வருகிறேன். எனக்கு நூற்றுக்கும் மேற்பட்ட நம்பிக்கையான வாடிக்கையாளர்கள் உள்ளனர். நான் தயாரித்து விற்கும் தோசை மாவில் பல குடும்பங்கள் சுவையாகவும், ஆரோக்கியமாகவும் சிற்றுண்டி உண்ணுகின்றனர். இந்த தொழிலில் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்த எனக்கு, கடந்த கோவிட் காரணத்தால் அறிவிக்கப்பட்ட பொது முடக்கம் எனக்கு பெரும் பாதிப்பாக இருந்தது.

இந்த காலகட்டத்தில் என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்து வந்த நானும் என் குடும்பமும் மிகவும் வறுமையில் வாடினோம். அப்பொழுது கருங்குளம் ஊராட்சி ஒன்றியத்தில், தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் கீழ், தனிநபர் தொழில் முதலீட்டுக் கடன் எனக்கு கிடைத்தது.

தென்னை வாழ்வளிக்கிறது ! TNRTP காத்து நின்றது!

ஊரில் உள்ள தென்னை மரங்கள் என் வாழ்வாதாரத்திற்கு அன்னையாக நிற்கின்றன. நான் கடந்த 7 வருடங்களாக தென்னை மரத்திலிருந்து கழிக்கின்ற ஓலைகளில் இருந்து தென்னந்துடைப்பம் உற்பத்திச் செய்து, விற்று வருகிறேன். கடந்த

அந்த சோதனையான காலகட்டத்தில் மிகவும் வறுமையில் இருந்த என் குடும்பத்திற்கு, தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் தந்த நிதி உதவி பெரும் துணையாக நின்றது.

இப்பொழுது வழக்கம் போல் 5க்கும் மேற்பட்ட ஊராட்சிகளில் நான் தோசை மாவு அரைத்து விற்பனை செய்து வருகின்றேன். இந்தத் தொழிலை மேலும் வளமாக்க திட்டமிட்டுள்ளேன். அதற்கு மற்றொரு மாவு அரவை எந்திரம் வாங்குவதற்காக வங்கியில் கடன் விண்ணப்பம் செய்து இருக்கிறேன்.

நான் தயாரித்து விற்பனை செய்யும் இட்லி தோசை சுவையாகவும், தரமாகவும் இருப்பதால், சமுதாயத்தில் பெண்கள் மத்தியில் எனக்கு நல்ல அங்கீகாரம் கிடைத்துள்ளது. எனக்கு தக்க சமயத்தில் நிதியுதவி வழங்கிய தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்திற்கு என்னுடைய மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அருணா, சேரகுளம் ஊராட்சி, கருங்குளம் ஒன்றியம், தூத்துக்குடி மாவட்டம்

பாரம்பரிய பானைத் தொழிலை பாதுகாத்தது TNRTP !

நான் எங்கள் பகுதியில் செயல்படும் தாமரை பூ மகளிர் சுய உதவி குழு உறுப்பினராக உள்ளேன். எனது குடும்பத்தில் 5 பேர் உள்ளனர். பரம்பரையாக எங்களுக்கு வாழ்வளிக்கும் மண்பானை உற்பத்தித் தொழிலை செய்து வருகிறோம். நாங்கள் உற்பத்திச் செய்கின்றன பானைகளை எங்கள் ஊரிலும், நகரப் பகுதிகளுக்கும் விற்பனை செய்து வருகிறோம்.

கடந்த ஆண்டு கோவிட் காரணமாக அறிவித்த பொது முடக்கம் காலத்தில், தொடர் போக்குவரத்து தடை காரணமாக வெளியூருக்குச் சென்று பானைகளை விற்பனை செய்ய முடியவில்லை. இதனால் பானைகளை உற்பத்திச் செய்ய முடியவில்லை. ஆண்டுதோறும் ஊரில் நடக்கின்ற திருவிழா மற்றும் சுப நிகழ்ச்சிகளும் நடைபெறவில்லை இதனால் பொது மக்களிடம் பணப்புழக்கம் இல்லாததால் யாரும் மண்பானைகள் வாங்க முன்வரவில்லை. எனது வியாபாரமும் நின்றது. வருமானமும் தடைப்பட்டது.

இதனால் எனது குடும்பம் வருமானம் இன்றி வறுமையில் வாடி வந்த நிலையில், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலம் தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தில், தனிநபர் தொழில் முனைவோருக்கான சிறப்பு நிதிக்கு விண்ணப்பித்தேன், விண்ணப்பித்த சில நாட்களிலேயே தொழில் முதலீட்டுக் கடன் ரூ.50,000/- பெற்றேன். இத்தொகை எனது தொழிலுக்காக நான் கந்து வட்டி வாங்காமல் காத்து நின்றது. இதனால் எனது குடும்பம் வறுமை நிலையிருந்து மீண்டது. இப்பொழுது பானைகளை வழக்கம் போல் உற்பத்தி செய்து எங்கள் பகுதிகளிலும் வெளியூர்களிலும் விற்பனை செய்து வருகிறோம். தக்க தருணத்தில் எங்களுக்கு முதலீட்டு நிதி வழங்கிய தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்திற்கு எனது நெஞ்சார்ந்த நன்றி.

முனியம்மாள், கும்மிடிப்பூண்டி, திருவள்ளூர் மாவட்டம்

உடலில் ஆக்ஸிஜன் அளவை அதிகரிக்கும் பொருட்கள்..!

நுரையீரலில் நோய்த்தொற்று ஏற்பட்டு ஆக்ஸிஜன் அளவு குறைந்து விட்டால் அதை அதிகரிக்கும் பொருட்களைப் பற்றி தெரிந்து கொள்வோம் வாருங்கள் 1/2 டம்ளர் தேங்காய் பாலில் 1/2 டீஸ்பூன் கடுக்காய் தூள் கலந்து காலை மாலை இரண்டு வேளையும் குடித்து வர ஆக்ஸிஜன் அளவு அதிகரிக்கும்.

1/2 டம்ளர் தேங்காய் பாலில் 1/2 டீஸ்பூன் கிராம்பு தூள் சேர்த்து கலந்து காலை மாலை இரு வேளை குடித்து வர ஆக்ஸிஜன் அளவு அதிகரிக்கும்.

இந்தக் கலவையை உணவுக்கு பின்போ அல்லது முன்போ அருந்தலாம்.

ஆக்ஸிஜன் அதிக அளவு உள்ள பொருட்களான கிராம்பு, பட்டை, மஞ்சள், சீரகம், துளசி, இஞ்சி ஆகியவற்றை அடிக்கடி சாப்பிட வேண்டும். மேற்கண்ட பொருட்களை தேநீராகவும் தயாரித்து சாப்பிடலாம்.

மூலிகைத் தேநீர் தயாரிக்கும் முறை

ஓமம் 100 கிராம், சோம்பு 50 கிராம், கிராம்பு 5 கிராம், பட்டை 5 கிராம், சுக்கு 10 கிராம் மற்றும் ஏலக்காய் 10 கிராம் ஆகியவற்றை ஒன்றாக சேர்த்து ஒரு வாணலியில் எண்ணெய் ஊற்றாமல் போட்டு அடுப்பில் வைத்து லேசாக வறுத்து அவற்றை பொடி செய்து காற்றுப் புகாதா ஒரு பாட்டிலில் அடைத்து வைத்துக் கொண்டு, காலை மாலை டீ போடும்போது இரண்டு பேருக்கு ஒரு ஸ்பூன் வீதம் கலந்து சாப்பிடலாம்.

அறிந்து கொள்வோம்...!

மகளிர் மீதான வன்முறையா?

மகளிர் உதவி மைய எண்

(Women's HELPLINE):

1091 (Toll Free)

24 மணி நேர குழந்தைகள்

பாதுகாப்பு உதவி எண் (CHILDLINE):

1098 (Toll Free)

CHILD LINE 1098 NIGHT & DAY

KAVALAN SOS

பெண்களின் பாதுகாப்பிற்கு

காவலன் செயலியை உங்கள் அலைபேசியில்

பதிவிறக்கம் செய்வீர்...

பெண்களின் பாதுகாப்பிற்காக

ஒருங்கிணைந்த இலவச தொலைபேசி எண்

181 (24 மணி நேர சேவை)

CALL 181 WOMEN HELPLINE ADVICE • RESCUE • COUNSELING

112

பெண்களுக்கான அவசர கால காவல்துறை

உதவி இலவச தொலைபேசி எண்

112 (24 மணி நேர சேவை)

‘மனம் இனிது’ மனநலத் திட்டம்

(சென்ற இதழ் தொடர்ச்சி) பகுதி 2

‘**மனநலம் மண்ணுயிர்க்கு ஆக்கம்**’ என்பது வள்ளுவர் வாக்கு. மனத்தில் உருவாகும் எண்ணங்கள், அதனால் விளையும் செயல்கள், உணர்ச்சி வெளிப்பாடுகள் ஆகியவற்றின் தொகுப்பே, மனநலத்துக்கு அடித்தளமாக திகழ்கிறது.

போதிய விழிப்புணர்வு இல்லாத காரணத்தினால் வெளியே தெரியாத பெரிய பிரச்சனையாக நமது சமுதாயத்தில் வளர்ந்து வரும் மன அழுத்தம் மற்றும் மனநலக் குறைபாடுகளை கண்டறிந்து, அவற்றை சரியான முறையில் அணுகி, அவற்றுக்கு தீர்வு காண வேண்டும் என்ற நோக்கத்துடன், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனமும், சென்னை மனச்சிதைவு ஆராய்ச்சி மையமும் (ளுஊஹறசுகு) இணைந்து மனநலம்’ குறித்த விழிப்புணர்வினை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஒரு அங்கமான தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையத்தின் (கூசூஏசுஊ) ஒருங்கிணைப்புடன், தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் மகளிர் திட்டத்தின் வழிகாட்டுதலில் செயல்படும் சமுதாயப் பயிற்றுநர்களுக்கு மனநல பிரச்சனைகள் குறித்த பயிற்சிகள் வழங்கப்பட்டு, அவர்கள் மூலம் ஊரகப் பகுதிகளில் வசிக்கும் மக்களின் மனநலத்தை மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கடந்த மாத முற்றம் இதழில் மனநலம் என்றால் என்ன? நேர்மறையான மனநலம், மனநலம் மற்றும் ஆரோக்கியம், மனநலம் பாதிப்படைவதின் ஆரம்பகால அறிகுறிகள் போன்றவை குறித்து அறிந்து கொண்டோம். இம்மாதம் மன நலம் குறித்த மேலும் பல விபரங்களை அறிந்து கொள்வோம் வாருங்கள்...

ஆரோக்கியமான மனநலத்தை மேம்படுத்தும் வழிமுறைகள்

- தேவைப்படும் போது நிபுணர்களின் உதவியை நாடுதல்
- மற்றவர்களுடன் தொடர்பில் இருத்தல்
- நேர்மறையாக இருத்தல்
- உடற்பயிற்சியில் ஈடுபடுதல்
- மற்றவர்களுக்கு உதவுதல்
- நல்ல உறக்கம்
- பிரச்சனைகளை கையாளும் திறனை வளர்த்துக் கொள்ளுதல்
- யோகா பயிற்சி முறைகள்
- ஆன்மீகத்தில் ஈடுபாடு

மனநலத்தை மேம்படுத்த நிறைய வழிமுறைகள் இருக்கின்றன. ஒருவருக்கு பொருந்தும் வழிமுறைகள் மற்றொருவருக்கு பொருந்தாமல் போகலாம். எனவே ஒவ்வொருவருக்கும் ஏற்ற முறைகளை தேர்ந்தெடுத்து கடைப்பிடிப்பது மிக அவசியமாகும்.

மனநோய் ஒரு அறிமுகம்

மனநோய் என்பது மற்ற உடல் சார்ந்த நோய்களை போல ஒருவகையாகும். உடல் பாதிக்கப்படும் போது நலக்குறைவு ஏற்படுகிறது.

அதுபோல மனம் பாதிக்கப்படும் போதும் நலக்குறைவு ஏற்படுகிறது. இப்பாதிப்பினால் ஒருவரது சிந்தனை, உணர்வுகள், நினைவாற்றல், முடிவெடுக்கும் திறன் போன்றவற்றில் தடை ஏற்பட்டு பேச்சும், நடவடிக்கையும் வித்தியாசமாகின்றன. வேலைத்திறன் பாதிக்கப்படுகின்றது. இத்தகைய பிரச்சனைகளால் ஒருவரின் ஒட்டு மொத்த வாழ்க்கை தரமும் பாதிக்கப்படுகின்றது. மனநோய் ஒரு தனிநபரை மட்டும் பாதிக்காமல் அவரது சுற்றமும் நட்பையும் சேர்த்தே பாதிக்கின்றது. இந்தியாவில் சராசரியாக இருபது சதவிகித மக்கள் ஏதாவது ஒருவகையான மனநோயினால் பாதிக்கப்படுகிறார்கள் என்று ஆய்வுகள் கூறுகின்றன.

மன நோய் ஏற்பட இதுதான் காரணம் என்று உறுதியாக எதையும் குறிப்பிட முடியாது. எனினும் மூளையில் ஏற்படும் காயம், இரசாயன மாறுதல், பரம்பரை மரபணுக்கள், சமூகத்திலோ அல்லது குடும்பத்திலோ ஏற்படும் நெருக்கடிகள், உளவியல் சார்ந்த காரணங்கள் போன்றவற்றால் மனநலம் பாதிக்கப்பட்டு மனநோய் ஏற்படலாம்.

மனநல இயலாமையின் அறிகுறிகள்,

பல்வேறு வயதினருக்கும் ஏற்படும் மனநல இயலாமையினை கீழ்கண்ட அறிகுறிகளைக் கொண்டு அறிந்திடலாம்.

8 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு

- குழந்தை பிறந்தவுடன் அழாமல் இருப்பது
- முகம் பார்ப்பதில் தாமதம்
- இரவில் படுக்கையில் சிறுநீர் கழித்தல்
- திக்கி திக்கி பேசுதல்
- அதீத சுறுசுறுப்பு
- கவனமின்மை
- விரல் சப்புதல்
- நகம் கடித்தல்
- வலிப்பு நோய்
- ஊசலாட்டமான மனநிலை
- தடுமாற்றமான மனநிலை
- பருவமடையும் காலக்கட்டத்தில் அதீத பயம் (பெண் குழந்தைகளுக்கு)
- படிப்பில் நாட்டமின்மை
- திருட்டு பழக்கம்

18 - 60 வயது வரை உள்ளவர்களுக்கு

- உறக்கமின்மை
- நம்பிகையின்மை
- ஆதரவின்மை
- பய உணர்வு
- கோபம்
- மறதி / சோகம் / சோர்வு
- சுய கட்டுப்பாட்டின்மை
- பசியின்மை
- தினசரி வேலைகளில் ஈடுபாடின்மை
- தனிமை எண்ணம்
- தனக்குத் தானே பேசி சிரித்தல்
- பல தரப்பட்ட உடல் வலிகள்
- குடிப்பழக்கத்திற்கு அடிமையாகுதல்
- தற்கொலை எண்ணம்
- சந்தேக எண்ணம்
- செய்த வேலையையே மீண்டும் செய்தல்

60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு

- ஞாபகமின்மை
- சுய சுத்தமின்மை
- செயல் முடக்கம்
- மொழித் தடுமாற்றம்
- தனக்குத் தானே பேசுதல்
- தூக்கமின்மை
- சுற்றித் திரிதல்
- தனிமையில் இருத்தல்
- மன உளைச்சல்

மனநோய் பற்றிய தவறான நம்பிக்கைகள்

மன நோய்க்கு காரணம் பேய், பிசாசு, பில்லி, சூனியம் போன்றவை என்று தவறான மூட நம்பிக்கைகள் நெடுங்காலமாக நம்மிடையே இருந்து வருகிறது. இதன் காரணமாக மனநோயாளிகளை மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை அளிப்பதற்கு பதிலாக, குடும்பத்தினர் பாதிக்கப்பட்டவரை மந்திரவாதியிடமும், கோயில்களுக்கும் மற்றும் தர்காவிற்கும் அழைத்து செல்கின்றனர். இதனால் வீண் செலவு, காலவிரயம் போன்றவை எற்படுவதுடன், நோயும் முற்றி விடுகிறது. மேலும் மனநோயாளிகள் பல்வேறு துன்பங்களுக்கு ஆளாகின்றனர்.

(தொடரும்)

Published by by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From Tamilnadu Corporation for Development of Women's Ltd., Printed by V. RAMESH, Chennai Micro Print Private Ltd., New No. 130 / Old No. 34, Nelson Manickam Road, Aminjikarai, Chennai – 600 029. Published from (80,100 Copies circulated) Tamilnadu Corporation for Development of Women's Ltd., Annai Teresa Mahalir Valagam,1 Valluvarkottam High Road, Nungambakkam, Chennai - 600 034. Editor : S. CHINNAPPAN

"சுய வேலை வாய்ப்பு திட்டத்தின் மூலம் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல்"

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்
TAMIL NADU URBAN LIVELIHOODS MISSION
Empowering Lives

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம்
நகர்ப்புற ஏழை எளிய மக்கள், தெருவோர வியாபாரிகள் மற்றும் நகர்ப்புற வீடற்றோருக்காக பல்வேறு திட்டங்களை தீட்டி தமிழக அரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருவது பெருமைக்குரியது.

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS. 344/2019
Reg.No. TN/CH/(C)/455/2021-2023 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP-564 / 2021-2023
Date of Publication : 1st Week of the every month Posted between 25 – 31st May 2021 Posted at Patrika Channel, Egmore.

அறிவில் விழிக்கும் ஊரகம்!
ஆற்றலில் செழிக்கும் தமிழகம்!

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் (TNRTP)
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
5வது தளம், திரு.வி.க. தொழிற்பேட்டை, சிட்கோ தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை– 600032, தமிழ்நாடு
(044) 434 43200 | tnrtpstate@gmail.com | www.tnrtp.org TNRTP tn_rtp tn_rtp